[திரு. ஆர். எம். வீரப்பன்] [1987 நவம்பர் 12

(நண்பகல் 12-00)

ஆகவேதான் சட்டத்தை வைத்துக்கொண்டு, அளவுகோலை வைத்துக் கொண்டு இது நடத்த முடியாத நடைமுறை என்பதை நாம் உணர வேண்டும். எனவே, ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த நிகழ்ச்சியாகக் கருதி நடைமுறைப் படுத்தவேண்டும் அதற்கு எல்லோரும் உறுதுணையாக இருக்க வேண்டும். ஆகவே, இப்போது, இந்த ஆணையினாலே ஒரு ஆண்டிற்கு ஒரு முறைதான் மாற்றுவோம் என்று எந்த அதிகாரியாவது சொன்னால், அந்த அதிகாரியை விஷயம் தெரியாதவர் என்று நாங்கள் எடுத்துக் கொள்ள மாட்டோம், விஷமத்தனம் செய்கிறார் என்றுதான் நாங்கள் கொள்வோம். எந்த தலைவராவது சொன்னால், அவர் ஒருவேளை இந்த ஆணையினுடைய—அந்த அதிகாரி சொல்கிற இண்டர்பிரிடேஷனை கருத்தில் வைத்துக் கொண்டு சொல்லக் கூடும் அல்லது தெரிந்தே கூட சொல்லக்கூடும். ஆகவே, அரசின் தரப்பிலேயிருந்து இந்தச் சட்டமன்றத்திலே இவ்வளவு விளக்கங்களை அளித்ததற்குப் பிறகும், இதை ஒரு ஆண்டிற்கு ஒருமுறைதான் மாற்றுவோம் என்று சொன்னால், ''குதிரைக்கு குர்ரம் என்றால் யானைக்கு அர்ரம்'' என்றுதானே பொருள் என்று சொல்கிற அந்தப் பட்டியலுக்குள்ளேதான் அவர்கள் சேர்க்கப் படுவார்கள்.

ஆகவே, அருள்கூர்ந்து நம்முடைய உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன், ஆணையை நாங்கள் திரும்பப் பெற்றுக் கொள்வதில் சங்கடமில்லை. ஆனால் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு அவசியம் இல்லாமல், தேவையான மாற்றங்களை, தேவையான நேரத்திலே அவர்கள் செய்து கொள்ளலாம் என்று இருக்கிற சூழ்நிலையில் இதை நிறைவேற்றுவதற்கு எல்லோரும் முயற்சி எடுக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டத்திலேயே இது தீர்த்துக் கொள்ளப்பட வேண்டிய ஒன்று, அரசாங்கத்திற்கு வரவேண்டிய ஒன்றே அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனிவகை முறைகள்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

1987 நவம்பர் 12]

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Your objection has been recorded Bill consideration -க்கு வரும்போது விரிவாகப் பேசலாம்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்டமுன்வடிவு 1987.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரிய (திருத்த) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) மூன்றாம் திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS